2. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

கோவில்பட்டி லட்சுமி மில் கதவடைப்பு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சோ. அழகர்சாமி அவர்கள், திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி லட்சுமி மில் கதவடைப்பின் விளைவாக இரண்டாயிரத்துக்கும் அதிகமான தொழிலாளர் குடும்பங்கள் வேலையில்லாமல் பாதிக்கப்பட்டுள்ளதால் உடனடியாக மில்லைத் திறந்து தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று விவாதிக்க ஒரு ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள்.

தொழில் தகராறுகளைத் தீர்த்துக்கொள்ள வேறு வழி வகைகள் இருப்பதாலும், கதவடைப்புப் போன்ற நிகழ்ச்சிகளை விவாதிக்க சபையின் பிற அலுவல்களை ஒற்றிவைக்க வேண்டியதில்லை என்ற தீர்ப்பு பல முறைகள் ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பதாலும் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

3. அரசினர் தீர்மானம்.

விதி 41 (3)—ஐத் தளர்த்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "ஒரே கூட்டத்தில் இரண்டிற்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக்கூடாது என்ற 41 (3) விதியைத் தளர்த்த வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவையின் அனுமதியோடு அவ்விதி தளர்த்தப்படுகிறது. இப்பொழுது திரு. கே. சகாதேவ கண்டர், திரு. கே. விநாயகம், திரு. வி. கே. கோதண்டராமன் ஆகியோர் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் கவனத்திற்கு ஒரு கவன ஈர்ப்பு விஷயத்தைக் கொண்டுவருவார்கள்.

4. கவன ஈர்ப்பு.

(1) செங்கற்பட்டு, வட ஆற்காடு மாவட்டங்களில் பருவ மழையின்மையும், பஞ்ச நிவாரண வேலைகளும்.

திரு. கே. சகாதேவ கண்டர் : தலைவர் அவர்களே, பருவ மழை தவறி விட்டதால், வடாற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் ஏரி, குளம், கிணறுகளில் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் காய்ந்து குடிநீர் கிடைக்காமல் மக்களும், கால்நடைகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால் அப்பிரதேசங்களைப் பஞ்சப் பிரதேசமாக அறிவித்து பஞ்சநிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றிய பொது முக்கியமான காரியத்தை நான் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : துணைத் தலைவர் அவர்களே, 1967-ம் ஆண்டின் முற்பகுதியில் பருவ மழை பொய்த்துவிட்டதன் காரணமாக, வட ஆற்காடு மாவட்டத்தில் சுமார் 2,000 ஏரிகளுக்கு 1967 டிசம்பர் வரையில் போதிய நீர் கிடைக்கவில்லை. 1967 டிசம்பரில் அம் மாவட்டத்தில் நல்ல மழை பெய்யவே பல ஏரிகளுக்கு நீர் கிடைத்தது. அதன் விளைவாக, நெல் கொள்முதல் நல்லமுறையில் நடைபெற்றதுடன், வேர்க்கடலை பயிரும் நன்றாக விளைந்தது.

2,947 பாசன ஏரிகளில், 2,765 ஏரிகள் வறண்டுள்ளதாகவும் எனவே பாசனத்திற்குப் போதிய அளவு நீர் வசதியில்லையென்றும் மாவட்ட ஆட்சி தலைவர் கடைசியாக அனுப்பிய பருவ அறிக்கையில் அறிவித்துள்ளார். வேலூர், வந்தவாசி, செய்யாறு, திருப்பத்தூர் வட்டங்களில் முன்னோடி முறையில் நிலத்தை உழுகிற வேலை மேற்கொள்ளப்பட்டு நடந்தேறி வருகிறது. மாவட்டத்தின் நிலப் பகுதிகளில் மானவாரி வேர்க்கடலைப் பயிர் விதைக்கப்பட்டு வருகின்றது. குடியாத்தம், திருப்பத்தூர், வாணியம்